# சுவாமி விபுலானந்தர் - ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

சுவாமி விபுலானந்தர் (மார்ச் 27, 1892 – சூலை 19, 1947) கிழக்கிலங்கையின் காரைதீவில் பிறந்து தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியவர். இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை முதலிய பல துறைகளில் கற்றுத் தேர்ந்தவர்.

இவர் இசைத்தமிழறிஞர், பேராசிரியர், துறவி. இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை என பல துறைகளில் இயங்கியவர். இசைத்தமிழ் ஆய்வு, இலக்கிய ஆய்வு, நாடகத்தமிழ் ஆய்வு, மொழியியல் என தன் ஆய்வுப்பணிகளை விரித்துக் கொண்டவர்.

சுவாமி விபுலானந்தர் அவர்கள் தமது தாய் மொழியையும், சமயத்தையும் வளர்க்க பாடுபட்டவர்களில் மிகவும் முக்கியமான ஒருவராக காணப்படுகிறார். இவர் இசை பற்றி ஆய்வு செய்து ‘யாழ் நூல்’ என்னும் அரிய இசைத்தமிழ் நூலினை தமிழ்மொழிக்கு தந்துள்ளார். இதுமட்டுமன்றி ‘மதங்க சூளாமணி’ என்னும் நாடகத்தமிழ் நூலினையும் எழுதி தமிழ்க்கலை வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியுள்ளார். இயல், இசை, நாடகம் என்பவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தமையால் இவரை ‘முத்தமிழ் வித்தகர்’ என அனைவராலும் அழைக்கப்பட்டார். இவ்வாறான சிறப்பு வாய்ந்த மனிதரை பற்றிய ஆவணப்படுத்தலானது மிகவும் அவசியமாகும்.

## செயற்றிட்ட நோக்கம்

இச்செயற்றிட்டம் மூலம் சுவாமி விபுலானந்தர் அவர்கள் ஆற்றிய பணிகள் அவர் பணிபுரிந்த இடங்கள், அவரால் நிறுவப்பட்ட நிறுவனங்கள் ,பாடசாலைகள் ,இல்லங்கள் என்பவை தொடர்பான வரலாற்றினை ஆவணபடுத்துவதுடன், அவரது ஆக்கங்கள் மற்றும் கையெழுத்துப்பிரதிகள் ஆகியவற்றை எண்ணிமப்படுத்தி பாதுகாத்தலுடன் அவருடன் தொடர்புபட்ட நபர்களை இனங்கண்டு அவர்களது வாய்மொழி வரலாற்றினை பதிவு செய்தல் .

## எதிர்பார்க்கப்படும் அடைவுகள்

- சுவாமி விபுலானந்தரது படைப்புக்களை எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல்
    1. வங்கியம் (1942)
    2. சங்கீத பாரிஜாதம் (1942)
    3. பாரிஜாத வீணை (1944)
    4. யாழ்நூல்
    5. மதங்க சூளாமணி
    6. சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள் (127 கட்டுரைகளின் தொகுப்பு, 3 பாகங்கள், 1997)
    7. விபுலானந்தர் இலக்கியம்
    8. பயனற்ற கல்வி (குமரன் 1934)
    9. பயனுள்ள கல்வி (குமரன் 1934)
    10. புதிய கல்வித் திட்டத்திற்கு ஆதரவு (1938)
    11. லகர எழுத்து (தமிழ்ப் பொழில்)
    12. சோழ மண்டலமும் ஈழ மண்டலமும் (கலைமகள்)
    13. கலைச்சொல்லாக்கம் (பச்சையப்பன் கல்லூரி மலர்)
    14. யவனபுரத்துக் கலைச் செல்வம்
    15. ஐயமும் அழகும்
    16. இலக்கியச் சுவை
    17. கணேச தோத்திர பதிகம்
    18. மாணிக்க பிள்ளையார் இரட்டைமணி மாலை
    19. சுப்பிரமணிய இரட்டை மணி மாலை
    20. குமரவேள் நவமணிமாலை
    21. நடராஜ வடிவம்
    22. தில்லைத் திருநடனம்
    23. The Phonetics of Tamil
    24. The Gift of Tongues
    25. An Essay on the Study of Language
    26. ஆங்கிலவாணி (கவிதைகள்)
    27. சாரல் மழை (ஷேக்ஸ்பியரின் Tempest)
- சுவாமி விபுலானந்தர் நிறுவிய பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களின் வரலாற்றை ஆவணப்படுத்தல்
- சுவாமி விபுலானந்தருடன் தொடர்புடைய நபர்களது வாய்மொழி வரலாற்றினை பதிவு செய்தல்.
- சுவாமி விபுலானந்தர் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகளை ஆவணப்படுத்தல்
    1. அடிகளார் படிவமலர்- ம. சற்குணம்
    2. விபுலானந்தர் இமயம் - மட்டக்களப்புத் தமிழ் சங்கம்
    3. விபுலானந்தர் காவியம் - சுப்பிரமணியம் சிவலிங்கம்
    4. சுவாமி விபுலாநந்தர் காலமும் கருத்தும் - சி. மௌனகுருசுவாமி விபுலாநந்தரின் சிந்தனை நெறிகள்- கா. சிவத்தம்பி

5. யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்- அ. கௌரிகாந்தன்
6. சுவாமி விபுலானந்த அடிகளார் ஆவணப்படம்விபுலம், விபுலானந்த அடிகள் மலர்
7. சுவாமி விபுலானந்தரின் சமயச்சிந்தனைகள் கலாநிதி அருணாச்சலம்
8. உள்ளக் கமலம்- சுவாமி விபுலானந்தர் மலர் வவுனியா இணைய நூலகம்
9. சிறுவருக்கு சுவாமி விபுலானந்தர் - ச.அருளானந்தம்

## செயற்றிட்ட காலம்

ஒரு வருட காலப்பகுதிக்குள் சுவாமி விபுலானந்தரது படைப்புக்கள் அவரது ஆக்கங்கள் அவர் நிறுவிய நிறுவனங்களது வரலாறுகள் அவரது சமூகப்பணி குறித்த விடயங்கள் மேலும் அவரது வரலாற்றோடு தொடர்புபட்ட அவரது பணிகளை இன்று வரை எடுத்துச் சென்றுகொண்டிருக்கிற நபர்கள் பற்றிய வாய்மொழி வரலாறுகள் என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**